**செய்தி வெளியீடு எண்: 118** **நாள்:20.05.2021**

## <u>செய்தி வெளியீடு</u>

தெற்கு அந்தமான் கடல் மற்றும் தென்கிழக்கு வங்கக் கடலில், தென் மேற்கு பருவமழை, முன் கூட்டியே **21.05.2021** அன்று துவங்க உள்ளது என்றும், **22.05.2021** அன்று, வடக்கு அந்தமான் கடல் மற்றும் கிழக்கு மத்திய வங்கக் கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை உருவாக அதிக வாய்ப்புள்ளதாகவும், பின்னர் இது தீவிரமடைந்து அடுத்த **72** மணி நேரத்தில் புயல் சின்னமாக உருவாகக்கூடும் என்றும், இந்த புயல் சின்னம் வடமேற்காக நகர்ந்து மேற்கு வங்கம் – ஒடிஷா கடற்கரையை **26.05.2021** அன்று சென்றடையும் என்றும், சென்னையில் உள்ள இந்திய வானிலை ஆய்வு மையத்தால் **19.05.2021** அன்று வெளியிடப்பட்டுள்ள சிறப்பு வானிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சிறப்பு வானிலை அறிக்கையில், காற்றின் வேகம், கடல் சீற்றம் மற்றும் மீனவர்களுக்கான எச்சரிக்கை குறித்து பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

**காற்றின் வேகம் குறித்த எச்சரிக்கை**

- **21.05.2021** முதல் தென்கிழக்கு வங்கக் கடல் மற்றும் தெற்கு அந்தமான் கடல் பகுதிகளில், மணிக்கு **40** முதல் **50** கிலோ மீட்டர் வேகத்தில், அதிக பட்சம் மணிக்கு **60** கிலோ மீட்டர் வேகத்திலும்,

- **23.05.2021** அன்று அந்தமான் கடல் மற்றும் கிழக்கு மத்திய வங்கக் கடல் பகுதிகளில் மணிக்கு **45** முதல் **55** கிலோ மீட்டர் வேகத்தில், அதிக பட்சம் மணிக்கு **65** கிலோ மீட்டர் வேகத்திலும் பலத்த காற்று வீசக்கூடும் என்றும்,
- இது மேலும், அதிகரித்து, **23.05.2021** முதல், மணிக்கு **50** முதல் **60** கிலோ மீட்டர் வேகத்தில், அதிக பட்சம் மணிக்கு **70** கிலோ மீட்டர் வேகத்தில் வீசக்கூடும் என்றும்,
- **24.05.2021** முதல் **26.05.2021** வரை, மத்திய வங்கக் கடலின் பெரும்பாலான பகுதிகளிலும்,
- **25.05.2021** முதல் **27.05.2021** வரை, வடக்கு வங்கக் கடல், ஒடிஷா–மேற்கு வங்கம் மற்றும் வங்கதேச கடற்கரைப் பகுதிகளிலும் சூறைக் காற்று வீசக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**கடல் சீற்றம் குறித்த எச்சரிக்கை**

- **21.05.2021** முதல் தென்கிழக்கு வங்கக் கடல் மற்றும் தெற்கு அந்தமான் கடல் பகுதிகளிலும்,
- **23.05.2021** அன்று, அந்தமான் கடல் மற்றும் கிழக்கு மத்திய வங்கக் கடல் பகுதிகளிலும்,
- **24.05.2021** முதல் **26.05.2021** வரை, மத்திய வங்கக் கடலின் பெரும்பாலான பகுதிகளிலும்,

- **25.05.2021** முதல் **27.05.2021** வரை, வடக்கு வங்கக் கடல் மற்றும் ஒடிஷா– மேற்கு வங்க கடற்கரைப் பகுதிகளிலும் கடலின் சீற்றம் மிகுந்து காணப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**மீனவர்களுக்கான எச்சரிக்கை**

- **21.05.2021** முதல் தென்கிழக்கு வங்கக் கடல் மற்றும் தெற்கு அந்தமான் கடல் பகுதிகளிலும்,
- **23.05.2021** முதல் **25.05.2021** வரை, மத்திய வங்கக் கடல் பகுதிகளிலும்,
- **25.05.2021** முதல் **27.05.2021** வரை, வடக்கு வங்கக் கடல், மேற்கு வங்கம்– ஒடிஷா மற்றும் வங்கதேச கடற்கரைப் பகுதிகளிலும் மீனவர்கள் மீன் பிடிக்கச் செல்ல வேண்டாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- ஏற்கனவே மேற்சொன்ன ஆழ்கடல் பகுதிகளில் மீன் பிடிக்கச் சென்றுள்ள மீனவர்கள் **23.05.2021–**க்குள் கரைக்கு திரும்புமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

**மழை தொடர்பான எச்சரிக்கை**

- **20.05.2021** அன்று, கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை, வேலூர், திருப்பத்தூர், சேலம் மற்றும் ராணிப்பேட்டை மாவட்டங்களில் ஒரு சில இடங்களில் கன மழை பெய்யக் கூடும் என்றும்,

- **23.05.2021** மற்றும் **24.05.2021** ஆகிய நாட்களில், நீலகிரி மாவட்டத்தில், ஒரு சில இடங்களில் கன மழை பெய்யக் கூடும் என்றும்,
- **20.5.2021** முதல் **24.05.2021** வரை, தமிழகத்தில் இடி மற்றும் மின்னலின் தாக்கம் இருக்கும் என்றும் இந்திய வானிலை ஆய்வு மையத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- மேலும், **20.05.2021** அன்று தமிழகத்தின் மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதி மற்றும் கடலோர பகுதிகளில் ஒரு சில இடங்களில் லேசானது முதல் மிதமான மழையும், தமிழ்நாட்டின் உள் மாவட்டங்களில் லேசான மழையும் பெய்யக்கூடும் என்றும்,
- **21.05.2021** அன்று, தமிழகத்தின் மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதி மற்றும் தமிழ்நாட்டின் உள் மாவட்டங்களில், ஒரு சில இடங்களிலும் லேசானது முதல் மிதமான மழையும், கடலோர பகுதிகளில் லேசான மழையும் பெய்யக்கூடும் என்றும்,
- **22.05.2021** அன்று, தமிழகத்தின் மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் மற்றும் தமிழ்நாட்டின் உள் மாவட்டங்களில், லேசானது முதல் மிதமான மழையும், கடலோர பகுதிகளில் லேசான மழையும் பெய்யக்கூடும் என்றும் இந்திய வானிலை ஆய்வு மையத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு அந்தமான் கடல் மற்றும் கிழக்கு மத்திய வங்கக் கடலில் புயல் சின்னம் உருவாக உள்ளது தொடர்பாக வரப்பெற்றுள்ள எச்சரிக்கையினைத் தொடர்ந்து, தேவையான அனைத்து முன் எச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வடக்கு அந்தமான் கடல் மற்றும் கிழக்கு மத்திய வங்கக் கடலில் புயல் சின்னம் உருவாக உள்ள நிலையில், ஆழ்கடல் பகுதிகளில் மீன் பிடிக்கச் சென்றுள்ள மீனவர்கள் அனைவரும் **23.05.2021**–க்குள் கரைக்கு திரும்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மேலும், ஆழ்கடலில் மீன் பிடிக்கச் சென்றுள்ள மீனவர்கள் அனைவருக்கும் Satellite Phones, NAVIC, NAVTEX ஆகிய தொலைத் தொடர்பு கருவிகள் மூலம் தகவல் தெரிவித்து அவர்கள் **23.05.2021**–க்குள் கரைக்கு திரும்புவதற்கான நடவடிக்கைகளை மீன்வளத் துறை ஆணையர் மேற்கொண்டு வருகிறார். ஆழ் கடலில் மீன் பிடிக்கச் சென்றுள்ள படகுகளுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு, மீனவர்கள் கரைக்கு திரும்புவதை 24 மணி நேரமும் கண்காணிக்கும் பொருட்டு, மீன் வளத் துறை அலுவலகங்களில், 24 மணி நேரமும் கட்டுப்பாட்டு அறை செயல்பட்டு வருகிறது. மேலும், ஆழ்கடலில் உள்ள மீன்பிடி படகுகளுக்கு கடலோர காவல் படை மூலம் தகவல் தெரிவிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பேரிடர் காலங்களில், பொது மக்கள் பேரிடர் தொடர்பான தகவல்களை பெறவும், பேரிடர் ஆபத்துகள் தொடர்பாக தகவல்களை தெரிவிக்கவும், 24 மணி நேரமும் இயங்கும் மாநில அவசரக் கட்டுப்பாட்டு மையம் மற்றும் மாவட்ட அவசரக் கட்டுப்பாட்டு மையத்தை முறையே 1070 மற்றும் 1077 என்ற கட்டணமில்லா தொலைபேசிகளில் பொது மக்கள் தொடர்பு கொள்ளலாம் என இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது. மேலும், பேரிடர் தொடர்பான தகவல்களை உடனுக்குடன் அறிந்து கொள்ள, தமிழ்நாடு பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் TNSDMA TWITTER சமூக வலைதளத்தினையும் மற்றும் TNSMART செயலியையும் பொது மக்கள் தொடர்ந்து கவனிக்குமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

******

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**